முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 12 - சைவநெறி

## புள்ளியிடும் திட்டம்



நயினை நாகபூசணி அம்மன் கோயிற் சிற்பம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

**க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020**
**12 - சைவநெறி**
**புள்ளி வழங்கும் திட்டம்**

**வினாத்தாள் II**
பரீட்சார்த்திகள் முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| வினாத்தாள் II இற்குரிய மொத்தப் புள்ளிகள் | = | **60** |
| வினா 1 – கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **10 x 02 =** | **20 புள்ளிகள்** |
| வினா 2 – கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **02 x 05 =** | **10 புள்ளிகள்** |
| வினா 3 – 7 வரை எவையேனும் 03 வினாக்கள் மொத்தப் புள்ளிகள் | **03 x 10 =** | **30 புள்ளிகள்** |
| | **புள்ளிகள் 60** | |

தனித்தனியாக வினாக்களுக்குப் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும் முறை
வினா 1 – 10 x 2 புள்ளிகள் வீதம், மொத்தம் :– 20 புள்ளிகள்.

| | | |
|---|---|---|
| வினா 2 – | (அ) பாடல்கள் 02 அடிமுறை வழுவாது எழுதுதல் | **02 x 03 = 06** |
| | (ஆ) பொழிப்புரை எழுதுதல் | **02 x 02 = 04** |
| | | **புள்ளிகள் 10** |

**வினா 3**
(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 4**
(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 5**
(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 6**
(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 7**
05 + 05 = 10 புள்ளிகள்

**பகுதி I மொத்தம் 40 புள்ளிகள்**
**பகுதி II மொத்தம் 60 புள்ளிகள்**
**மொத்தம் 100 புள்ளிகள்**

**விசேட அறிவுறுத்தல் :** ஒரு சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் **01 x 40 = 40**
கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளைப் பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**சரியான விடைகளின் தொகை** **40**
**பத்திரம் I இன் மொத்தப் புள்ளி** **40**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

**உதாரணம் - வினா இல 03**

| | | |
|---|---|---|
| (i) ............................................................ <br> ............................................................ <br> ............................................................ | ✓ | △ $\frac{4}{5}$ |
| (ii) ............................................................ <br> ............................................................ <br> ............................................................ | ✓ | △ $\frac{3}{5}$ |
| (iii) ............................................................ <br> ............................................................ <br> ............................................................ | ✓ | △ $\frac{3}{5}$ |
| **மொத்தம்** ⟶ | | □ $\frac{10}{15}$ |

Department of Examinations - Sri Lanka

**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo


Department of Examinations - Sri Lanka
Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

ශෛවනෙරි **I, II**
**சைவநெறி I, II**
Saivanery **I, II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## சைவநெறி I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** நாம் எக்காரியத்தையும் தொடங்கும் முன்னர் வழிபட வேண்டிய தெய்வம்
(1) சிவபெருமான் (2) மகாவிஷ்ணு (3) பிள்ளையார் (4) முருகன்

**2.** 'வேதம்' என்ற சொல்லின் பொருள்
(1) அறிவு (2) பாட்டு (3) இசை (4) மந்திரம்

**3.** பின்வருவனவற்றுள் ஸ்காந்த புராணத்தில் உள்ளடங்கும் பகுதி யாது?
(1) விஷ்ணு சங்கிதை (2) சங்கர சங்கிதை (3) காசிப சங்கிதை (4) சுகஸ்திய சங்கிதை

**4.** ஒருவரை 'சிவபுத்திரன்' எனும் தகுதிக்கு இட்டுச் செல்லும் தீட்சை
(1) விசேட தீட்சை (2) சமய தீட்சை
(3) நிர்வாண தீட்சை (4) சாம்பவ தீட்சை

**5.** சைவ பரிபாலன சபையின் செயற்பாடுகளுக்கான முக்கிய நிர்வாக மையமாகத் திகழ்வது,
(1) இந்து சமயப் பேரவை ஆகும். (2) நாவலர் ஆச்சிரமம் ஆகும்.
(3) இலங்கை இந்துமாமன்றம் ஆகும். (4) சிவதொண்டன் நிலையம் ஆகும்.

**6.** 'சூக்கும பஞ்சாட்சரம்' எனப்படுவது,
(1) சிவசிவ (2) நமசிவாய (3) சிவாயசிவ (4) சிவாயநம

**7.** வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சைவ சமயப்பற்றுள்ள பெண்மணியினால் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனம்
(1) சைவப்பிரகாச வித்தியாசாலை (2) திருக்கேதீச்சர அறப்பணிமன்றம்
(3) அம்பலவாணசுவாமி புண்ணியநாச்சி தர்மம் (4) சிவயோகினி அறக்கட்டளை


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** "நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்......" என்ற பாடலினால் மக்கள் சேவையின் மகத்துவத்தை எடுத்துரைத்தவர் யார்?
(1) திருஞானசம்பந்தர் (2) திருமூலர் (3) திருநாவுக்கரசர் (4) அருணகிரிநாதர்

**9.** திரௌபதையம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய நாட்டார் வழிபாட்டு முறைகளுள் ஒன்று
(1) தர்மர் பட்டாபிஷேகம் (2) குளிர்த்திச் சடங்கு
(3) கொம்பு முறித்தல் (4) கன்னிமார் பிடித்தல்

**10.** "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்" எனக் கூறும் நூல்
(1) மணிமேகலை (2) திருவாசகம் (3) திருமந்திரம் (4) சிலப்பதிகாரம்

**11.** 'ஜனநாத மங்கலம்' என்று சிறப்பிக்கப்படும் இராசதானி
(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை (3) தம்பதெனிய (4) கோட்டை

**12.** கொடிமரம், திரைச்சீலை, கயிறு என்பன குறித்து நிற்பவை முறையே
(1) பதி, பசு, பாசம் (2) ஆணவம், கன்மம், மாயை
(3) அறம், பொருள், இன்பம் (4) நிலம், நீர், காற்று

**13.** சைவ விழுமியங்கள் அடங்கியுள்ள தொகுதி
(1) ஈகை, கள்ளுண்ணல் (2) ஒப்புரவு, நாணம்
(3) அன்புடைமை, வாய்மை (4) ஒழுக்கமுடைமை, வெகுளி

**14.** அகழ்வாய்வின் மூலமாக இரத்தினபுரி மாவட்டத்தில், கல்லறை ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சைவசமய சின்னங்களாவன,
(1) இலிங்கமும் வேலாயுதமும் ஆகும். (2) திரிசூலமும் நாகபந்தமும் ஆகும்.
(3) காளை வடிவமும் பார்வதி சிலையும் ஆகும். (4) விநாயகர் சிலையும் நாகபந்தமும் ஆகும்.

**15.** நவக்கிரகங்களுள் சாயா (நிழல்) கிரகங்களாவன,
(1) சனி, வியாழன் என்பனவாகும். (2) வெள்ளி, இராகு என்பனவாகும்.
(3) இராகு, கேது என்பனவாகும். (4) கேது, சனி என்பனவாகும்.

**16.** 'கோகில சந்தேசய' (குயில் விடுதூது) எனும் சிங்கள மொழியிலான தூதுப் பிரபந்தத்தில் சிறப்பிக்கப்படுவது,
(1) இணுவில் கந்தசுவாமி ஆலயமாகும்.
(2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமாகும்.
(3) வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயமாகும்.
(4) பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயமாகும்.

**17.** ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த சைவசமயம் சார்ந்த இலக்கியம்
(1) வண்ணை வைத்தியலிங்க குறவஞ்சி (2) சிவராத்திரி புராணம்
(3) தட்சிண கைலாச புராணம் (4) கல்வளையந்தாதி

**18.** சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பு கல்லடியில் நிறுவிய பாடசாலை
(1) விவேகாநந்தா வித்தியாலயம் (2) சிவாநந்த வித்தியாலயம்
(3) இந்துக்கல்லூரி (4) விபுலாநந்தா வித்தியாலயம்

**19.** அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான 'பூசலார்' நாயனார்,
(1) அரசனின் வேண்டுகோளுக்கிணங்க கோயில் கட்டியவராவார்.
(2) மக்களின் விருப்பத்திற்கமைய கோயிலமைத்தவராவார்.
(3) புறக்கோயிலின் அடிப்படையில் மனதில் கோயில் கட்டியவராவார்.
(4) கோயில் புனரமைப்பில் தீவிரமாக ஈடுபட்டவராவார்.

**20.** சைவசித்தாந்த கொள்கையின்படி ஆன்மாவின் இறுதி இலட்சியம்
(1) பாசங்களோடு கூடி நிற்றலாகும். (2) வினையாற்றுதலாகும்.
(3) தன்முனைப்போடு நிற்றலாகும். (4) வீடுபேறு அடைதலாகும்.

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**21.** திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் மீது தேவாரத் திருப்பதிகங்களைப் பாடிய நாயன்மார்கள்,
(1) சம்பந்தரும் சுந்தரரும் ஆவர். (2) அப்பரும் சுந்தரரும் ஆவர்.
(3) சம்பந்தரும் அப்பரும் ஆவர். (4) சுந்தரரும் சேந்தனாரும் ஆவர்.

**22.** காலக் கணிப்பீடுகளுள் 'சௌரமானம்' என்ற கணிப்பீட்டு முறை,
(1) சந்திரனை அடிப்படையாகக் கொண்டது.
(2) சூரியனை அடிப்படையாகக் கொண்டது.
(3) நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டது.
(4) இராசிகளை அடிப்படையாகக் கொண்டது.

**23.** கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவத்தில் 'குடுக்கை கூறுதல்' எனும் நிகழ்வு நிகழ்த்தப்படுவது,
(1) திருவிழாவில் பங்குகொண்ட அனைவரையும் கௌரவிப்பதற்காகும்.
(2) மழைவளம் செழிக்க வேண்டும் என்பதற்காகும்.
(3) தேவர்களை மகிழ்விப்பதற்காகும்.
(4) திருவிழாக் காலங்களில் உதவி புரிந்தவர்களை கௌரவிப்பதற்காகும்.

**24.** இலங்கையிலிருந்து ஞானப்பிரகாச சுவாமிகள் தமிழகம் சென்றமைக்கான பிரதான காரணம்
(1) இந்துக் கோயில்களை போர்த்துக்கேயர் இடித்தழித்தமை ஆகும்.
(2) அந்நியர்கள் இந்துக்களை மதம் மாற்றியமை ஆகும்.
(3) போர்த்துக்கேயர்கள் பசுவதையைப் புரிந்தமை ஆகும்.
(4) ஐரோப்பியர்களின் தீவிர பொருளாதாரக் கொள்கைகள் ஆகும்.

**25.** வேதத்தின் பகுதியாகிய 'ஆரணியகம்' என்பது,
(1) யாகங்களின்போது மேற்கொள்ள வேண்டிய சடங்கு முறைகளை விளக்குவதாகும்.
(2) மிக ஆழமான ஆன்மிக உண்மைகளை விளக்குவதாகும்.
(3) தெய்வங்களிடம் இம்மை, மறுமை இன்பங்களை வேண்டும் பகுதியாகும்.
(4) சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவகக் கதை வடிவில் எடுத்துரைப்பதாகும்.

**26.** ஆகமங்களில் 'தந்திரங்கள்' எனப்படுபவை
(1) சைவ நெறிக்குரியவையாகும். (2) வைணவ நெறிக்குரியவையாகும்.
(3) சாக்த நெறிக்குரியவையாகும். (4) காணாபத்திய நெறிக்குரியவையாகும்.

**27.** "இறைவனை அறிவதாகிய பேரொளி தோன்றும் வரையிலே ஆன்மாவுக்கு மாயை வழிகாட்டி நிற்கின்றது" என்பதனை வெளிப்படுத்தி நிற்கும் பாடலடி
(1) "எவையும் ஏகப் பொருளாகி நிற்கும் பொருள்" (2) "அகர உயிர் போல் அறிவாகி எங்கும்"
(3) "ஒரு பொருளும் காட்டாதிருளுருவம் காட்டும்" (4) "விடிவாம் அளவும் விளக்கு அனைய"

**28.** ஒளியைக் கொடுப்பதனால் விபூதிக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்
(1) பஸ்மம் (2) திருநீறு (3) பசிதம் (4) ஷாரம்

**29.** திருவதிகை மடத்தில் தங்கியிருந்து திருத்தொண்டு புரிந்து முத்தியடைந்தவர்
(1) செம்பியன் மாதேவியார் (2) காரைக்காலம்மையார்
(3) மங்கையர்க்கரசியார் (4) திலகவதியார்

**30.** மாணவ நிலையிலுள்ள ஒருவருக்கான முக்கிய கடமைகளுள் பொருத்தமான ஒன்று
(1) மற்றவர் மீது அன்பு பாராட்டி அரவணைத்து மரியாதை செலுத்துதல்
(2) பெற்றோர், ஆசிரியர் முதலான பெரியவர்களுக்கு பணிந்து ஒழுக்கத்தோடு நடத்தல்
(3) விழாக்களின் போது கோயில்களில் ஒன்றுகூடி செயற்படுதல்
(4) வீட்டிற்கு வரும் அதிதிகளுக்கு விருந்தளித்து உபசரித்தல்

**31.** "நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல்" என ஆகமத்தைச் சிறப்பிப்பது
(1) பெரியபுராணம் (2) திருவாசகம் (3) திருமந்திரம் (4) தேவாரம்

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**32.** மூலமூர்த்தியாக விளங்கும் சிவலிங்கத்தை விநாயகப் பெருமானாக நினைத்து வழிபடும் இரண்டு திருத்தலங்களாவன,
(1) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் என்பனவாகும்.
(2) மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், திருக்கேதீஸ்வர ஆலயம் என்பனவாகும்.
(3) திருக்கேதீஸ்வர ஆலயம், களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் என்பனவாகும்.
(4) களுதாவளைப் பிள்ளையார் ஆலயம், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் என்பனவாகும்.

**33.** மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கும்போது புராணபடனம் செய்யப்படுவது,
(1) கந்த புராணத்தையாகும். (2) திருச்செந்தூரப் புராணத்தையாகும்.
(3) திருவிளையாடற் புராணத்தையாகும். (4) திருத்தணிகைப் புராணத்தையாகும்.

**34.** "அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்" எனச் சங்கம வழிபாட்டின் சிறப்பை எடுத்துரைத்தவர்
(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர்
(3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

**35.** சமூகத்தில் கோயிலின் முக்கியத்துவம் பற்றிய அப்பர் சுவாமிகளின் கூற்று எது?
(1) "திருக்கோயில் இல்லாத் திருவிலூரும்.... ஊரல்ல அடவிகாடே"
(2) "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"
(3) "மாலற நேயமும் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும்"
(4) "ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

**36.** திருவிழாக்களின் போது செய்யப்படும் 'கிராமசாந்தி' என்பது,
(1) வீதியைச் சுத்தஞ் செய்வதற்காக நிகழ்த்தப்படுவதாகும்.
(2) சிவாசாரியார் தமக்கும் உற்சவமூர்த்திக்கும் காப்பு கட்டுவதாகும்.
(3) ஊரைக் காவல் செய்ய வைரவ மூர்த்திக்கு செய்யும் பூசையாகும்.
(4) சுத்தமான மண் எடுத்து உலகின் தானிய விருத்தி கருதி செய்யப்படும் பூசையாகும்.

**37.** ஆறுமுகநாவலருடன் தொடர்புடைய மிகச் சரியான கூற்று எது?
(1) பேதிநோயினால் கத்தோலிக்க மக்கள் மடிவது கண்டு மனம் வருந்தி அரசிடம் முறையிட்டவர்.
(2) சர்வமத மாநாட்டில் சைவசமயத்தின் மேன்மையை எடுத்துரைத்தவர்.
(3) தர்மபுர ஆதீனத்தினால் 'நாவலர்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.
(4) சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகச் செயற்பட்டவர்.

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்க.

| நூல் | நூலாசிரியர் | நூலின் மையப் பொருள் |
|---|---|---|
| A - பெரிய புராணம் | D - குமரகுருபரர் | G - சைவசித்தாந்த உண்மைகளை, கதை வடிவில் உணர்த்துவது |
| B - கந்த புராணம் | E - சேக்கிழார் | H - கல்வியும் சொற்சுவை நிறைந்த மொழியாற்றலும் பெருகும் அருளினைக் கூறுவது |
| C - சகலகலாவல்லிமாலை | F - கச்சியப்ப சிவாசாரியார் | I - தொண்டுநெறியின் சிறப்பை விளக்குவது |

**38.** திருத்தொண்டர் புராணத்துடன் தொடர்புடைய தொகுதி
(1) ADG (2) AEI (3) BDG (4) BEI

**39.** கலைமகளோடு தொடர்புடைய தொகுதி
(1) CDG (2) CDH (3) CDI (4) CFH

**40.** முருகக் கடவுளுடன் தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) AFG (3) BFG (4) BFI

**

Department of Examinations - Sri Lanka


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 12 | විෂයය<br>பாடம் | சைவநெறி |
|---|---|---|---|

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 1 | 31. | 1 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 3 | 23. | 1 | 33. | 2 |
| 04. | 1 | 14. | 2 | 24. | 3 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 4 | 35. | 1 |
| 06. | 4 | 16. | 4 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 4 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 4 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 4 | 30. | 2 | 40. | 3 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් } එක් පිළිතුරකට ලකුණු **01** බැගින්
விசேட அறிவுறுத்தல் } ஒரு சரியான விடைக்கு **01** புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව<br>சரியான விடைகளின் தொகை | 25/40 | I පත්‍රයේ මුළු ලකුණු<br>பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25/40 |
|---|---|---|---|


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**12 T I,II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

ශෛවනෙරි I, II
**சைவநெறி I, II**
Saivanery I, II

## சைவநெறி II

* முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) தியானத்தின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(ii) தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கம் யாது?

(iii) அருணகிரிநாதர் அருளிய பக்திப் பனுவல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(iv) யாழ்ப்பாணத்தில் நித்திய அன்னதானம் வழங்கும் ஆலயங்கள் **இரண்டின்** பெயர்களைத் தருக.

(v) சிவாகமங்கள் கூறும் **மூவகைக்** கிரியைகளையும் குறிப்பிடுக.

(vi) இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் 'பதவியா' எனும் இடத்தில் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட ஆலயத்தின் பெயர் யாது?

(vii) பொலன்னறுவைக் காலத்தில் பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கான ஆதாரங்கள் **இரண்டினைத்** தருக.

(viii) ஒன்பதாம் திருமுறையில் உள்ளடங்கும் நூல்கள் எவை?

(ix) இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் எழுச்சி பெற்றிருந்த ஆலயங்களின் சிறப்பினைக் கூறும் நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(x) திருவரங்கப்பெருமானின் அழகை, தொண்டரடிப்பொடியாழ்வார் எவ்வாறு வர்ணித்துள்ளார்?

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(அ) "நாம் ஆர்க்கும் குடியல்லோம்..."

(ஆ) "பால் நினைந்து ஊட்டும்..."

(இ) "அங்கமும் வேதமும் ஓது நாவர்..."

(ஈ) "பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்..."

(உ) "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்..."

(ii) மேலே (i) இல் எழுதிய பாடல்களின் பொழிப்புரையை எழுதுக.

**3.** "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

சுந்தரர்

(i) சுந்தரரின் மறுபெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) இறைவனால் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்டமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.

(iii) சுந்தரர் ஆற்றிய அற்புதங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**4.** "வாகைசேர் அரித்தவிசின்மேல் வதனம் மூவிரண்டு உள்ள
ஏகநாயகன் உலகு அருள் கருணையோடு இனிது உற்றான்"

கந்தபுராணம்

(i) கச்சியப்ப சிவாசாரியாரின் **இரண்டு** சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக.

(ii) கந்தபுராணத்திலுள்ள **ஆறு** காண்டங்களையும் குறிப்பிடுக.

(iii) கந்தபுராண யுத்த காண்டத்தின் மீட்சிப்படலத்தில் கூறப்படும் செய்திகளைச் சுருக்கமாக விளக்குக.

**5.** "அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவு முடையா னுளன்"

திருவருட்பயன்

(i) பதியின் **மூவகைத்** திருமேனிகளையும் தருக.

(ii) பதியானவர் மூவகைத் திருமேனிகளை எடுப்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.

(iii) பதியின் **இருவகை** இலக்கணங்களையும் சுருக்கமாக விளக்குக.

**6.** "இந்துசமய வழிபாட்டு முறைகளுள் நாட்டார் வழிபாடும் சிறப்பானதொன்றாகும்."

(i) 'சடங்கு' என்னும் சொல்லின் பொருளினை சுருக்கமாக எடுத்துக்கூறுக.

(ii) நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் 'அலங்காரக்கலை' பற்றி சுருக்கமாக விளக்குக.

(iii) நாட்டார் வழிபாட்டில் 'வைரவர் வழிபாடு' பெறும் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருக்கேதீஸ்வர ஆலயம்

(ii) அபரக்கிரியைகள்

(iii) நாளாந்த வாழ்வில் தெய்வ சிந்தனை

(iv) நாகதம்பிரான் வழிபாடு

* * *

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> - https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி II

## கற்றல் பேறுகள்

**1.**

I. அகவழி மூலம் வாழ்வை செம்மைப் படுத்திக் கொள்வர்.

II. வாழ்வில் நற்பண்புகளை வளர்த்துக் கொள்வர்.

III. அருளாளர்களின் பக்திப் பனுவல்களை அறிந்து, பாடும் திறனைப் பெறுவர்.

IV. ஆலயங்களினூடாக சமூக விழுமியங்களை அறிந்து ஒழுகுவர்.

V. ஆலயக் கிரியைகளை அறிந்து அதன் சிறப்பினை உணர்ந்து கொள்வர்.

VI. ஈழத்தின் சைவத் தொன்மையை அறிந்து கொள்வர்.

VII. இலங்கையில் பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகளை அறிந்து பல் சமய, சமூக விழுமியங்களை தம் வாழ்விலும் கடைப்பிடிப்பர்.

VIII. திருமுறைத் தொகுப்பில் அடங்கும் நூல்களைப் பற்றிய திறனைப் பெறுவர்.

IX. ஈழத்தின் அந்நியர் ஆட்சிக்காலத்தின் சைவாலயங்களின் எழுச்சி பற்றிய நூல்களை பட்டியற்படுத்துவர்.

X. இறைவனின் பிரதிமா இலட்சணங்களை பாடலினூடாக உணர்ந்து கொள்வதுடன் பக்தி உணர்வினையும் பெறுவர்.

**2.** அடிமுறை பிழையாது திருமுறைப் பாடல்களையும் அவற்றின் பொருளையும் எழுதும் ஆற்றலைப் பெற்றிருப்பதுடன் விழுமியப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வர்.

**3.** நாயன்மார்களின் பணிகளை அறிந்து தம் வாழ்விலும் கடைப்பிடிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர்.

**4.** கந்த புராணத்தின் சமயதத்துவ கருத்துக்களை அறிந்து கொள்வதுடன் அவற்றினூடாக நல்ல பண்புகளை அறிந்து பின்பற்றுவர்.

**5.** சைவ சித்தாந்தத்தினூடாக தத்துவ உண்மைகளை புரிந்து கொள்வதுடன் இறைவனின் மேலான தன்மையை உணர்ந்து அதன்வழி கடைப்பிடிப்பர்.

**6.** நாட்டார் வழிபாட்டுச் சிறப்புக்களையும் அழகியல் உணர்வுகளையும் அறிந்து தம் வாழ்வில் கடைப்பிடிப்பர்.

**7.** I. ஆலயத் தொன்மையினையும் சிறப்பினையும் அறிந்து பக்தி உணர்வைப் பெறுவர்.

II. அபரக் கிரியைகளின் விஞ்ஞான மற்றும் சமய ரீதியான தத்துவங்களை அறிந்து தம் வாழ்விலும் கடைப்பிடிப்பர்.

III. நாளாந்த வாழ்வில் இறை சிந்தனையுடன் செயற்படும் ஆற்றலைப் பெறுவர்.

IV. இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றியும் அதனோடு தொடர்புடைய வழிபாட்டின் சிறப்பினையும் அறிந்து வழிபடுவர்.


Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# சைவநெறி – II

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

**i. தியானத்தின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுக.**

1. ஆன்ம தியானம் – நம்மைப் பற்றித் தியானித்தல் – எமது வாழ்வைச் செம்மைப்படுத்த உதவும்.
2. சிவத் தியானம் – கடவுளைப் பற்றித் தியானிப்பது – உயர்வான அக வழிபாடு

**ii. தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கம் யாது?**

நம்மில் உள்ள தீய எண்ணங்களைப் போக்கி நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வது

**iii. அருணகிரி நாதர் அருளிய பக்திப் பனுவல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

திருப்புகழ்,
கந்தரலங்காரம்,
கந்தரனுபூதி,
கந்தரந்தாதி,
வேல்விருத்தம்,
மயில் விருத்தம்,
சேவல் விருத்தம்,
திருவகுப்பு.

**iv. யாழ்ப்பாணத்தில் நித்திய அன்னதானம் வழங்கும் ஆலயங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.**

செல்வச் சந்நிதி ஆலயம்,
நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்

Department of Examinations - Sri Lanka

**v. சிவாகமங்கள் கூறும் மூவகைக் கிரியைகளையும் குறிப்பிடுக.**

1. நித்திய கிரியைகள்
2. நைமித்திய கிரியைகள்
3. காமிய கிரியைகள்

**vi. இலங்கையில் வடமத்திய மாகாணத்தில் 'பதவியா' எனும் இடத்தில் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட ஆலயத்தின் பெயர் யாது?**

இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

vii. **பொலனறுவைக் காலத்தில் பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்கு ஆதரவு வழங்கியமைக்கான ஆதாரங்கள் இரண்டினைத் தருக.**

- விஜயபாகு – பிராமணரைக் கௌரவித்ததோடு விஜயராஜ ஈச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான்.
- விக்கிரமபாகு – குருநாகலில் விக்கிரமசலாமேக ஈஸ்வரக் கோயிலைக் கட்டினான்.
- மகாபராக்கிரமபாகு – இந்து சமயத்திற்கு ஆதரவு வழங்கிப் பிராமணர்களுக்கு உதவினான்.

viii. **ஒன்பதாம் திருமுறையில் உள்ளடங்கும் நூல்கள் எவை?**

- திருவிசைப்பா,
- திருப்பல்லாண்டு

ix. **இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் எழுச்சி பெற்றிருந்த ஆலயங்களின் சிறப்பினைக் கூறும் நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

- பறாளை விநாயகர் பள்ளு,
- மறைசையந்தாதி,
- கல்வளையந்தாதி,
- நல்லைக் குறவஞ்சி,
- வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி,
- நல்லைக் கலிவெண்பா,
- சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்,
- வெருகல் சித்திர வேலாயுதர் காதல்.

x. **திருவரங்கப் பெருமானின் அழகை, தொண்டரடிப் பொடியாழ்வார் எவ்வாறு வர்ணித்துள்ளார்?**

பச்சை நிறத்தையுடைய பெரியதொரு மலைபோன்ற திருமேனியையும், பவளத்தை ஒத்த திருவாயையும், தாமரைப்பூப் போன்ற சிவந்த திருவிழிகளையும் உடைய அச்சுதனே என்று வர்ணித்துள்ளார்.

**(2 x 10= 20 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**2.**

i. **மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.**

(அ) "நாம் ஆர்க்கும் குடியல்லோம்......"

(ஆ) "பால் நினைந்து ஊட்டும்........"

(இ) "அங்கமும் வேதமும் ஓது நாவர்....."

(ஈ) "பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்......"

(உ) "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்......"

ii. **அவற்றின் பொழிப்புரையை எழுதுக.**

(அ) திருச்சிற்றம்பலம்

நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம் ஆர்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்க வெண்குழை ஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

நாம் யாருக்கும் அடிமை அல்லர்; இயமனுக்கும் அஞ்சமாட்டோம்; நரகத்துன்பமும் எமக்கு இல்லை; வேறு துன்பங்களும் எமக்கு இல்லை; என்றும் மகிழ்ந்திருப்போம்; பிணி அறியோம்; யாருக்கும் பணிய மாட்டோம்; எமக்கு எக்காலத்திலும் இன்பமே அன்றித் துன்பம் இல்லை; தாம் யாருக்கும் கீழ்ப்படாத தன்மையரும் அடியார்களுக்கு சுகத்தை செய்பவரும் (சங்கரனும்) தனது ஒரு காதிலே குழை அணிந்தவருமாகிய அத்தலைவருக்கே நாம் மீளா அடிமையானோம். கொய்த மலர்களால் அர்ச்சிக்கப்படுகின்ற அவருடைய திருவடிகளையே அடைந்தோம்.

Department of Examinations - Sri Lanka

(ஆ) திருச்சிற்றம்பலம்

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

திருச்சிற்றம்பலம்


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**பொழிப்புரை:**

(குழந்தையின் பசியை) நினைந்து (குழந்தை கேட்பதன் முன் தானாகவே) பால் ஊட்டுகின்ற தாயைவிட மிகவும் இரங்கி, பாவியாகிய என்னுடைய உடம்பை உருகச்செய்து, உள்ளே ( ஞானமாகிய ) ஒளியைப் பெருகச் செய்து அழிவற்ற பேரின்பமாகிய தேனைச் சொரிந்து, என் பின்னே தொடர்ந்து திரிந்த என் செல்வமே! சிவபெருமானே! நான் உன்னைத் தொடர்ந்து இறுகப் பற்றிக் கொண்டேன். இனி நீ என்னை விட்டு எங்கே செல்வாய்? (என்னை விட்டு உன்னால் விலக முடியாது)

(இ) திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓது நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதி தவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கயல் ஆர்புனல் செல்வம் மல்கு சீர்கொள் செங்காட்டங்குடி அதனுள்
கங்குல் விளங்கெரி ஏந்தி ஆடும் கணபதீச்சரம் காமுறவே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும் ஓதுகின்ற நாவினை உடைய அந்தணர்கள், உமது திருவடிகளை எப்போதும் துதிக்க, வானத்தில் உள்ள சந்திரன் தவழுகின்ற மாடமாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் வல்லாளரே! கயல் மீன்கள் புரள்கின்ற நீர்வளமும் செல்வமும் நிறைந்த, சிறப்பு வாய்ந்த திருச் செங்காட்டங் குடியில் இரவிலே ஒளி வீசுகின்ற அனல் ஏந்தி ஆடும் கணபதீச்சரத்தை விரும்பியதற்கான காரணத்தைக் கூறுவீராக.

Department of Examinations - Sri Lanka

(ஈ) திருச்சிற்றம்பலம்

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

மண், நீர், நெருப்பு, காற்று, வானம் எனும் ஐந்தும் தமது முன்னைய நிலை கெட்டுக் கலங்கினாலும் உமையம்மையை ஒரு பாகத்திற் கொண்டவரான பெருமானின் மலர் போலும் திருவடிகளை மறவாதவர்கள். புகழ்ந்துரைக்கப்படுகின்ற அன்பு நெறியிலே உறுதியோடு நிற்பவர்கள். எத் தன்மையான குறைபாடுமிலாத நற்குணமாகிய பெருமலையை ஒத்தவர்கள்.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

(உ) திருச்சிற்றம்பலம்

சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் தண்டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும் வாழ்த்துகிலேன் மயில்வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

(நான் எனது) மனக் கவலையையும் உடல் நோயையும் போக்குவதற்கு, மயில்வாகனனாகிய முருகப் பெருமானை சிந்திக்கின்றேனில்லை! அவனுக்குத் தொண்டு செய்கிறேனில்லை! (அவனது) தண்டை அணியப் பெற்ற சிறிய திருப்பாதத்தை வணங்குகிறேனில்லை! ஏதும் சொல்லி வாழ்த்துகிறேனில்லை! அவனைத் தரிசிக்கிறேனில்லை! பொய்யைப் பழிக்கிறேனில்லை! உண்மையைப் பழகுகிறேனில்லை (நிலை நிறுத்துகிறேனில்லை!) (என் செய்வேன்!)

**பாடல் = 3x2 = 06 புள்ளிகள்**
**பொழிப்புரை = 2x2 = 04 புள்ளிகள்**
**மொத்தம் = 10 புள்ளிகள்**

**3. 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'**
**- சுந்தரர்-**

i. **சுந்தரரின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

நம்பியாரூரர், வன்றொண்டன், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், ஆருரர்

**(02 புள்ளிகள்)**

ii. **இறைவனால் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பட்டமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.**

திருக்கைலாய மலையில் சிவனுக்குத் தொண்டு செய்து வந்த சுந்தரர் என்பவர் தாம் செய்த ஒரு பிழைக்குத் தண்டனையாக, பூமியில் பிறக்க வேண்டியதாயிற்று " நீ முன்பு நமக்குத் தொண்டன், நம் ஏவலால் மண்ணிற் பிறந்தனை: மண்ணில் வாழ்க்கைத் துன்பம் உன்னைத் தொடராதபடி வந்து நாமே தடுத்தாட் கொண்டோம்".

**(03 புள்ளிகள்)**

iii. **சுந்தரர் ஆற்றிய அற்புதங்கள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

1. குண்டையூரில் நெல்லுப் பெற்றமை
2. செங்கற்கள் பொன் கட்டிகளாகியமை
3. பொதி சோறு பெற்றமை
4. முதலையுண்ட பிள்ளையை உயிர் பெறச் செய்தமை
5. காவிரி பிரிந்து வழிவிட்டமை
6. ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை

**(05 புள்ளிகள்)**
**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/
Department of Examinations - Sri Lanka

**4. 'வாகைசேர் அரித்தவிசின்மேல் வதனம் மூவிரண்டு உள்ள**
**ஏகநாயகன் உலகு அருள் கருணையோடு இனிது உற்றான்'**
**- கந்த புராணம் -**

i. **கச்சியப்ப சிவாச்சாரியாரின் இரண்டு சிறந்த பண்புகளைக் குறிப்பிடுக.**

காஞ்சிபுரத்தில் குமர கோட்டம் என்னும் தலத்தில் அர்ச்சகராக விளங்கிய காளத்தியப்ப சிவாசாரியாரது தவப் புதல்வர், வடமொழியிலும், தமிழிலும் நிறைந்த அறிவு கைவரப் பெற்றவர், ஒழுக்கமும், அருளுணர்வும், வாய்க்கப் பெற்றவர், குமரக் கோட்டத்தில் வீற்றிருக்கும் முருகப் பெருமானை அன்போடு பூசித்து வந்தவர்.

**(02 புள்ளிகள்)**

ii. **கந்த புராணத்தின் ஆறு காண்டங்களையும் குறிப்பிடுக.**

1. சம்பவ காண்டம் (உற்பத்திக் காண்டம்)
2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம்
4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தட்ச காண்டம்

**(03 புள்ளிகள்)**

iii. **கந்த புராணத்தின் யுத்த காண்டத்தின் மீட்சிப்படலத்தில் கூறப்படும் செய்திகளைச் சுருக்கமாக விளக்குக.**

கந்த புராணத்தின் ஒவ்வொரு காண்டமும் படலம் எனும் பெயரில் உட்பிரிவுகளைக் கொண்டது. யுத்த காண்டத்தின் ஒரு படலம் – மீட்சிப்படலம்.

தேவர்களைச் சிறைப்படுத்தி ஆணவத்தோடு உலவிய சூரபன்மனை வதம் செய்து, அவனை மயிலாகவும், சேவலாகவும் ஆட்கொண்டருளிய முருகப்பெருமான், தனது படைத்தலைவரான வீரவாகு தேவரிடம், தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து வருமாறு கட்டளையிட அவரும் அவ்வாறே அவர்களைச் சிறை மீட்டார். சிறையிலிருந்து சயந்தன் முதலான தேவர்கள் மீண்டமை முதலான செய்திகளைக் கூறுவதால் இப்படலம் மீட்சிப்படலம் எனப் பெயர் பெற்றது.

**(05 புள்ளிகள்)**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

5. 'அருவு முருவு மறிஞர்க் கறிவா
முருவு முடையா னுளன்'

- திருவருட்பயன்-

i. **பதியின் மூவகைத் திருமேனிகளையும் தருக.**

- அருவம் – ஞான சொரூபியாகிய இறைவன்
- உருவம் – தடத்தற் திருமேனி
- அருவுருவம் – சிவலிங்கம்

**(02 புள்ளிகள்)**

ii. **பதியானவர் மூவகைத் திருமேனிகளை எடுப்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துக.**

- சொரூப நிலையிள்ள இறைவன் தன் பரம நிலையினின்றும் இறங்கி ஆன்மாக்களுக்கு முத்தி இன்பம் கொடுப்பதற்காக மூவகைத் திருமேனிகளை மேற்கொள்ளுகின்றார்.

**(03 புள்ளிகள்)**

iii. **பதியின் இருவகை இலக்கணங்களையும் சுருக்கமாக விளக்குக.**

- **சொரூப இலக்கணம்**
கடவுளின் உண்மையான நிலையாகும். கடவுள், குணம், குறிகளுக்கு அப்பாற்பட்டவர், மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாதவர். ஆனந்தமயமானவர், அறிவதற்கு அரியவராய், உவமை இல்லாதவராய், அதி சூக்குமராய், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவராய் ஆன்மாக்களின் முத்திக்கு இருப்பிடமாய் விளங்குபவர். சைவ சித்தாந்தம் சொரூபலக்கண நிலையில் கடவுளைப் பரமசிவம் என்று கூறும்.

- **தடத்த இலக்கணம்**

* எண் குணங்கள்
* தடத்த நிலையில் இறைவன் பஞ்ச கிருத்தியங்களைச் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) செய்தருளுகிறார்.

படைத்தல் : ஆன்மாக்களுக்கான தனு, கரணம், புவனம், போகம் என்பவற்றை உருவாக்குதலே படைத்தல் எனப்படும்.

காத்தல் : படைக்கப்பட்டவை இருக்க வேண்டிய காலம் வரையும் அவற்றைக் காப்பது காத்தல் எனப்படும்.

அழித்தல் : அக்காலம் முடிய அவற்றை அழிப்பது அழித்தல் ஆகும்.

மறைத்தல் : ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலத்தின் வீரியத்தைத் தடுத்தல் மறைத்தல் ஆகும்.

அருளல் : ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி, அவற்றுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தல் அருளல் எனப்படும்.

**( 05 புள்ளிகள் )**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**6. 'இந்துசமய வழிபாட்டு முறைகளுள் நாட்டார் வழிபாடும் சிறப்பானதொன்றாகும்.'**

**i. 'சடங்கு' என்னும் சொல்லின் பொருளினை சுருக்கமாக எடுத்துக்கூறுக.**

**சடங்கு**

செயல் எனப் பொருள்படும். நாட்டார் தெய்வங்களுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் பக்தியோடு ஆற்றப்படும் செயல்கள் எல்லாம் சடங்குகள் ஆகும்.

**(02 புள்ளிகள்)**

**ii. நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் 'அலங்காரக்கலை' பற்றி சுருக்கமாக விளக்குக.**

**அலங்காரக்கலை**

கூத்துக்கலையானது ஆட்டம், பாட்டு, வாத்தியம், ஒப்பனை முதலானவற்றைத் தன்னகத்தே அடக்கிய ஒரு கலையாகும். காவடியாட்டம், கரகாட்டம் முதலானவை அத்தகையதானதே. இக்கலைகளில் ஒப்பனை பிரதானம்.

காவடி, கரகம் முதலானவற்றைத் தயாரிப்பதில் அலங்காரக் கலை முதன்மையானது. சடங்குக் காலங்களில் கும்பம் அலங்கரித்தல், கோயில் வளாகத்தை அலங்கரித்தல், கோயில் வாயில்களில் அமைக்கப்படும் தோரணங்கள், குருத்தோலை, இலை, குழை – இயற்கையோடு இணைந்தனவாய் அமைதல்.

**(03 புள்ளிகள்)**

**iii. நாட்டார் வழிபாட்டில் 'வைரவர் வழிபாடு' பெறும் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.**

**வைரவர் வழிபாடு**

வைரவர் ஒரு மர நிழலில் திரிசூல வடிவிலும், எளிய வடிவிலும் விளங்குகின்றார்.

கிராமத்தெய்வம், காவற்தெய்வம்.

சிவாகமங்களிலும், கிராமிய சடங்குப் பாடல்களிலும் வைரவ மூர்த்தியின் தோற்றம் வர்ணிக்கப்படுகின்றது.

பிரமனுடைய ஆணவத்தை அடக்குவதற்கு சிவனின் அம்சமாகத் தோன்றியவர்.

உடுக்கு, சூலம், கபாலம் ஏந்தியிருக்கிறார்.

இந்துக்கள் குலதெய்வமாக தங்கள் வளவுகளில் அமைத்து வழிபடுவர். நாட்டார் வழிபாட்டில் ஆண்டுக்கொருமுறை வழிபடுவர்.

வைரவர் விரதங்கள் – சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தை மாதத்தின் முதல் செவ்வாய்

**( 05 புள்ளிகள் )**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**7. மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறு குறிப்பு எழுதுக.**

**(i) திருக்கேதீஸ்வர ஆலயம்**
**(ii) அபரக்கிரியைகள்**
**(iii) நாளாந்த வாழ்வில் தெய்வ சிந்தனை**
**(iv) நாகதம்பிரான் வழிபாடு**

**(i) திருக்கேதீஸ்வர ஆலயம்**

- இடம் – மன்னார் மாவட்டம், மாதோட்டம்
- தேவாரப் பாடல் பெற்றது.
- இறைவன் – திருக்கேதீஸ்வர நாதர், இறைவி – கௌரிஅம்பாள்

  தீர்த்தம் – பாலாவி
- கேது வழிபட்டமையால் கேதீஸ்வரம் ஆயிற்று, நாகர் வழிபட்டதால் நாகநாதர் எனவும் சிவன் அழைக்கப்படுகின்றார்.
- சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்தின் மீது தேவாரம் பாடியுள்ளனர்.
- போர்த்துக்கேயர் ஆட்சியில் இத்தலம் இடித்து அழிக்கப்பட்டது.
- சிவராத்திரி முக்கிய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.
- புராதன லிங்கம் காணப்படுகின்றது.
- பல சைவப்பெருமக்களால் திருத்தலப்பணி இடம்பெற்றது.
- ஆறுமுக நாவலர் "தேன்பொந்து ஒன்று உள்ளது" எனக்கூறி ஆலயப் புனரமைப்புக்கு வழிவகுத்தார்.

**( 05 புள்ளிகள்)**

**(ii) அபரக்கிரியைகள்**

- அபரம் – பிந்தியது, கிரியை – செயல்
- உடலைவிட்டு ஆன்மா நீங்கியபின் பூதவுடலை மயானத்திற்குக் கொண்டு சென்று தகனம் செய்தல் அல்லது புதைத்தல் வரை பல்வேறு கிரியைகள் இடம்பெறுகின்றது.
- புதல்வர்கள் அபரக்கிரியைகளை செய்யத்தக்கவர்கள் (புதல்வர்கள் இல்லாதபோது உறவினர்கள் செய்யலாம்.)
- அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, மாசிகம், வீட்டுக்கிருத்தியம், திவசம், சிரார்த்தம் என்பன முக்கியம் பெறுகின்றது.
- மகாளய பட்சம் – புரட்டாதி மாத அபரபக்க பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலத்தில் விரதம் அனுட்டித்து பிதிர்த் தர்ப்பணம், தான தர்மம் என்பன செய்வர். பிதிர்கள் நற்கதி அடைய வேண்டும் எனும் நோக்கிலேயே அவை செய்யப்படுகின்றன. இறந்த மூதாதையரின் ஆத்மாக்கள் பிதிர்கள் எனப்படும்.
- கிரியைகள் மேற்கொள்ளும் குருமார்களுக்குத் தானம் வழங்கப்படும்.
- பிதிர்கள் நற்கதி அடையவேண்டும் எனும் நோக்கிலே அபரக் கிரியைகள் செய்யப்படுகின்றன.


Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/

**( 05 புள்ளிகள்)**

**(iii) நாளாந்த வாழ்வில் தெய்வ சிந்தனை**

- மனிதப்பிறவி கிடைத்தற்கரியது. ஏனைய உயிர்களைவிட மேம்பட்டது.
- குடும்பம் வாழும் சூழல், வாழ்க்கை அனுபவங்கள் அவரவர் அறிவினைத் தீர்மானிக்கும். இவற்றிற்கு மேலாக சமயம் வலியுறுத்தும் உண்மைகள் நல்லறிவைப் புகட்டும்.
- எமக்குமேல் ஒரு சக்தி இருக்கின்றது என்ற உணர்வினைப் பெறுதல் நாம் செய்யும் புண்ணிய பாவங்களின் பயனை அறிந்து பாவங்களை விலக்கி வாழ்தல்
- நாம் நாளாந்த வாழ்வில் தெய்வ சிந்தனையுடன் கருமங்களை ஆற்ற வேண்டும்.
- நாளாந்த வாழ்வில் பொழுது விடிவதற்கு முன் நித்திரை விட்டெழுதல் தொடக்கம் இரவு நித்திரைக்குப் போகும்வரை நாம் நாளாந்த வாழ்வில் தெய்வ சிந்தனையுடன் கருமங்களை ஆற்றும் போது பாவங்கள் அழிகின்றன.
- கடவுள் வழிபாட்டுக்கு சிறந்த வழிகளில் ஒன்று தியானம். இது உயர்வான வழிபாடு என உணர்ந்து ஒழுகுதல்

**( 05 புள்ளிகள்)**

**(iv) நாகதம்பிரான் வழிபாடு**

- பூர்வீக சமுதாயம் பலவற்றிலும் நாக வழிபாடு இடம்பெற்றுள்ளது.
- நாகம் தெய்வத்தன்மை பொருந்தியது.
- சிவனுக்கும், திருமாலுக்கும், அம்பாளுக்கும், விநாயகருக்கும், முருகனுக்கும் நாகத் தொடர்புகள் உண்டு.
- இலங்கையில் நாக வழிபாட்டுடன் தொடர்புடைய ஆலயங்கள் நாகர்கோயில், சேனையூர், புளியம்பொக்கணை, பண்டாரியா வெளி, புதூர், நவாலி, செம்பியன் பற்று,ஏழாலை, வடலியடைப்பு, புளியந்தீவு, அனலைதீவு.
- நாகத்தோடு தொடர்புடைய ஊர்ப் பெயர்கள் – இலங்கை நாகதீவு என அழைக்கப்பட்டமை
- நாகதம்பிரான் எனும் பெயரில் அமைந்த தம்பிரான் எனும் சொல் சிவனைக் குறிக்கின்றது.

**( 05 புள்ளிகள்)**

**( 5 +5 = 10 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka



Download all Past Papers>> https://bookbeekid.com/resource/past-papers/